
குறும்பா
த. கோவேந்தன்

குறும்பா

த. கோவேந்தன்

வளர்மதி பதிப்பகம்
புத்தகம் வெளியிடுவோர்
விற்பனையாளர்
8-2, இராணி அண்ணாநகர்
கே.கே. நகர்
சென்னை-600078

● KURUMBA- Collection of Limeriks by T.KOVENDAN(C)
○ First Edition November 1984 ● Published by KIRUBALUXMY, VALARMATHY PATHIPPAHAM— Madras—600 078 ○ Printed at MARSHALL PRINTERS Madras—600 033 ○ Price Rs. 4—00 ●

மஹாகவி

புகழ்
வாழ்த்து
வெளியீடு

குறிப்புகள்

- ஈழத்துக் கவிஞர் மஹாகவி
தமிழில் முதன் முதல்
குறும்பா தந்தவர். அவரது
குறும்பா நூலும் பிற படைப்புகளும்
பெறுமதி மிக்கவை.
அமரர் அவர் நினைவு என்றும் நெஞ்சில்....

- இந் நூலின் அட்டைப்படம்
அமைத்தவர் ஓவியர் தாசன்.
அட்டையில் பயன்படுத்திய
ஓவியங்களின் ஓவியர்கள்
இடம் பெற்ற பத்திரிகைகள்
நன்றிக்கு உரியவர்கள். உரியவை.

- அணிந்துரை தந்த தங்கப்பா
கூடவே தந்தது இரு குறும்பாக்களை
தவற விடுவதா என்று...
40 ஆம் பக்கத்தில் கடைசி இரண்டும்.

- எங்கள் இலக்கியப் பணி தொடர்வது
உங்கள் ஆதரவிலேயே சாத்தியம்.

-பதிப்பகத்தார்.

முன்னுரை

எதற்காக எழுதுகிறோம், ஏன் எழுதுகிறோம், யாருக் காக எழுதுகிறோம் என்ற வினா எழுப்பாமலே பலர் எழுது கின்றனர். எதையும் பணமாக்கும் சிறு முதலாளியம் 'புல புலெனக் கலகலெனப் புற்றீசல்' போல் எழுத்து வடிவ மனைத்தையும் விற்பனைக்கு ஆக்குகின்றன. அவர்களுள் ஒருவராகாமல், மக்களின் சிந்தனையில் ஒரு சிலிர்ப்பையும், வாழ்வில் மலர்ச்சியையும் உண்டாக்கும் நூல்களையே வெளி யிடுவதில் கண்ணுங் கருத்துமாயிருக்கும் 'வளர்மதி' ஜெக நாதன் 'குறும்பா'வை நல்ல முறையில் வெளியிடுகிறார். அவர்க்கென் நன்றி.

'குறும்பா' முற்பகுதி எழுதி 11 ஆண்டுகளாகின்றன பிற்பகுதி இவ்வாண்டில் எழுதியது. மறைந்த 'மஹாகவி' யின் குறும்பாவே எனக்கு முன்னோடி. அந்த நூலைத் தந்து மகாகவியை அறிமுகம் செய்து வைத்த எம். ஏ. ரஃமான் அவர்கட்கும், இந் நூலினைப் பார்த்துச் சிறந்த அணிந்துரை தந்த பேரா. ம. இலெ. தங்கப்பா அவர்கட்கும் என் நன்றி உரியதாகுக.

இந் நூலிலுள்ள பெரும்பாலான குறும்பாக்கள் எள்ள லும் ஏசலும், குத்தலும் குடைதலும், கேலியும் கிண்டலும் கொண்டவைதாம். இவ் வகை இலக்கியத்திற்கு என்னைத் தூண்டியவை இரண்டு குறள்கள்.

நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

ந. கோவேந்தன்

முன்னுரை

எதற்காக எழுதுகிறோம், ஏன் எழுதுகிறோம், யாருக்காக எழுதுகிறோம் என்ற வினா எழுப்பாமலே பலர் எழுதுகின்றனர். எதையும் பணமாக்கும் சிறு முதலாளியம் "புலுபுலெனக் கலகலெனப் புற்றீசல்" போல் எழுத்து வடிவமனைத்தையும் விற்பனைக்கு ஆக்குகின்றன. அவர்களுள் ஒருவராகாமல், மக்களின் சிந்தனையில் ஒரு சிலிர்ப்பையும், வாழ்வில் மலர்ச்சியையும் உண்டாக்கும் நூல்களையே வெளியிடுவதில் கண்ணுங் கருத்துமாயிருக்கும் 'வளர்மதி' ஜெகநாதன் 'குறும்பா'வை நல்ல முறையில் வெளியிடுகிறார். அவர்க்கென் நன்றி.

'குறும்பா' முற்பகுதி எழுதி 13 ஆண்டுகளாகின்றன. பிற்பகுதி இவ்வாண்டில் எழுதியது. மறைந்த 'மஹாகவி'யின் குறும்பாவே எனக்கு முன்னோடி. அந்த நூலைத் தந்து மகாகவியை அறிமுகம் செய்து வைத்த எம். ஏ. ரஃமான் அவர்கட்கும், இந் நூலினைப் பார்த்துச் சிறந்த அணிந்துரை தந்த பேரா. ம. இலெ. தங்கப்பா அவர்கட்கும் என் நன்றி உரியதாகுக.

இந் நூலிலுள்ள பெரும்பாலான குறும்பாக்கள் எள்ளலும் ஏசலும், குத்தலும் குடைதலும், கேலியும் கிண்டலும் கொண்டவைதாம். இவ் வகை இலக்கியத்திற்கு என்னைத் தூண்டியவை இரண்டு குறள்கள்.

நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

த. கோவேந்தன்

அணிந்துரை

குறும்பா என்ற இந்த வடிவம் தமிழுக்குப் புதியது. ஆங்கிலத்தில் LIMERIK அல்லது NONSENSE VERSE என்ற பெயரில் இது வழங்கி வருகின்றது. வெறும் நகைச் சுவைக்கும். கிண்டலுக்கும் பயன் பட்ட இந்த வடிவத்தைக் 'குறும்பா' என்ற பெயரில், இலங்கைப் பாவலர் மஹாகவி என்பவர் தமிழுக்குக் கொணர்ந்தார். இப்பொழுது அன்பர் கோவேந்தன் இதனைக் கருவியாக்கிக் கொண்டுள்ளார்.

நம்மைச் சுற்றிப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அரசியல், சமயம், இலக்கியம், திரைப்படம் போன்ற துறைகளில் மக்களுக்கு நன்மை செய்வதாகக் கூறிக் கொண்டு பலர் அடித்து வரும் கூத்துகளை அன்றாடம் கண்முன் கண்டு வருகின்றோம். எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் ஒழுங்கின்மையே ஊழல்கட்குக் காரணமாயிருக்கின்றது. நாட்டை நல்வழிப் படுத்துவதாகக் கூறிக் கொண்டு ஒவ்வொருவரும் தன்னலச் சுரண்டல்களை மேற்கொள்கின்றனர். இவற்றையெல்லாம் நகைச்சுவையோடு சுட்டிக் காட்டுவதற்குக் குறும்பாவினைக் கோவேந்தன் கையாள்கின்றார்.

பாவலன் என்பவன் ஒழுங்குணர்வுடையவன்; தன் இலக்கியத்தின் வாயிலாய் ஒழுங்கை உணர்த்துதலும், ஒழுங்கின்மையைச் சுட்டிக் காட்டுதலும் பாவலனின் பணிகள். இப் பணிகளைச் செய்வதற்கு நகைச்சுவையும் அங்கதமும் சிறந்த கருவிகளாகப் பயன்படுகின்றன.

தீமைகளைக் கடுமையான மொழியில் கடிந்து சொல்லும் பொழுது அத் தீமைக்குக் காரணமாயிருப்பவர்கட்கு வருத்தம் ஏற்படத்தான் செய்யும். அக் கடுமையோடு நகைச்சுவையும் கலந்திருக்குமானால், படிப்பவர் வருத்தத்தை மறந்து சிரிக்க நேரிடுகின்றது. பாவலன் மேல் சீற்றமும் ஏற்படுவதில்லை. சொல்லும் கருத்தும் நன்கு பதிகின்றன.

நம்மைச் சுற்றி நடக்கும் கோணல் மாணல்களை நகைச் சுவைதான் சிறந்த முறையில் எடுத்துக் காட்டும் தன்மையுடையது. எனவேதான் பெருங் கலைஞர்கள் எல்லாம் நகைச் சுவையைப் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளனர்.

பெர்னாட்சா, மார்க்கு துவைன், கலைவாணர் என். எசு. கிருட்டிணன் இவர்களை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

அரசியலின் பேரால் நடக்கும் தில்லு முல்லுகள், மதப் போர்வையில் மறைந்திருக்கும் சுரண்டுதல்கள், மக்களைத் தவறான வழியில் திருப்பும் திரை உலக ஒழுக்கக் கேடுகள், உண்மையையோ, ஒழுங்கையோ பற்றி அக்கறையில்லாமல் பெயர், புகழைத் தேடிக் கொண்டிருக்கும் இலக்கிய உலகக் கோணல்கள், எல்லாவற்றையும் கோவேந்தன் நகைச்சுவையோடு எடுத்துக் காட்டுகின்றார். தீமைகளின் மேல் அருவருப்பு ஏற்படும்படி அவற்றை எடுத்துக் காட்டினால் தான் மக்கள் அவற்றை வெறுக்கக் கற்றுக் கொள்வார்கள். தம் அங்கதத்தின் வாயிலாக இதில் வெற்றி காண்கிறார் கோவேந்தன்.

உண்மை கசப்பாகத்தான் இருக்கும். பிழை செய்பவர்கள் தங்கள் பிழைகள் சுட்டிக் காட்டப்படுவதை ஒரு நாளும் விரும்புவதில்லை. இதனால் பிழைகளைச் சுட்டிக் காட்டுபவர்கள் பெரும்பாலோரின் வெறுப்புக்கு ஆளாவது இயற்கையே. அந்தக் காலத்திலிருந்து உண்மைகளை எடுத்துச் சொல்லிச் சொல்லிப் பெரும்பாலோரின் வெறுப்புக்கு ஆளாகிக் கொண்டிருப்பவர் கோவேந்தன். இருப்பினும் சிறிதும் கவலைப்படாமல், சுற்றி நடக்கும் கோணல் மாணல்களைச் சுட்டிக்காட்டும் பணியைத் தொடர்ந்து நடத்துகின்றார்.

ஆங்கிலத்தில் வேறு நோக்கத்தோடு அமைந்த குறும்பாவினைத் தமிழில் முழுக்க முழுக்க அங்கதத்துக்காகப் பயன்படுத்தியிருப்பது ஒரு புதுமையே.

இக் குறும்பாவின் வடிவத்திலும் ஒரு புதுமை செய்திருக்கின்றார் கோவேந்தன். ஐந்தடிகள் கொண்ட பாடலோடு ஆறடிகள் கொண்ட ஒரு வடிவத்தையும் புதிதாக சேர்த்திருக்கின்றார்.

சில பாடல்கள் மெருகேறவில்லை என்பது உண்மையே. ஒரு வடிவம் பயன்படுத்தப் பயன்படுத்தத்தான் மெருகேறும். தமிழின் குறும்பாவின் காலம் இனிமேல்தான் வரவேண்டும்.

இன்னும், பலர் இவ் வடிவத்தைப் பின்பற்றி எழுதுவதற்கு இந் நூல் ஒரு வழிகாட்டியாக இருக்கட்டும்.

ம. இலெ. தங்கப்பா

குறும்பா

கோட்டைச்சுவர் உயரம் எண்ணி அயர்ந்தேன்
'கொள்ளை போகா திருக்க' என்றார் பயந்தேன்;
நாட்டை ஆள்வோர் தம்மை மக்கள்
நம்பிடாத முன்னேற்றமாய்
நன்றுசெய்த முன்காணியை வியந்தேன்!

O

நம்பிக்கைநீ வைத்திடடி என்றான்
நம்பி கையை வைத்துஅவளை வென்றான்;
நம்பிக்கையை வைத்தவன்பால்
நாலாறு திங்களாக்கி
நல்வயிற்றுக்குள் அவனே நின்றான்!

O

அறிஞர்களின் பழக்கங்களைத் தேடி
அவற்றை எல்லாம் பின்பற்றினான் மாறி;
செறியாமை, இளைப்பிருமல்,
நீரிழிவு, குருதியழுத்தம்,
சொறிசிரங்கின் கூட்டமானான் கூடி!

கற்பனையின் பரி கிடைத்தால் கோடி
காவியங்கள் படைத்திடுவேன் பாடி,
விற்பதெங்கே விளைவதெங்கே
விலையும் என்ன விளம்பீர் என்றான்
சொற்களஞ்சிய எதுகைமோனை தேடி!

O

அனைத்துஉயிரும் கடவுள் என்றான் கீரன்
ஆண்டவனே வடிவுகொண்ட ஈரன்;
முனைந்துசொன்ன நேரத்திலே
மூட்டைப்பூச்சி, கொசு கடிக்கச்
சினந்தழித்தான் முணங்கிக்கொண்டே வீரன்!

O

இடைவெளியைக் காட்டிநின்றாள் சிறுக்கி,
எழுத்தாளன் கதையளந்தான் கிறுக்கி;
எதையும் பணம் ஆக்குகின்ற
எத்துமுத லாளிக்காகப்
படம் எழுதித் தந்தான் ஒரு பொறுக்கி!

O

இளங்கோ, கம்பன், வில்லி வள்ளல் கூடி
ஏனோ வந்தார், அலைந்தார் வேலை தேடி—
நிலைமைஇது: 'புலவர்தேர்வில்
நிலைத்தால்தான் வேலை' என்றார்
அளவில் தொலை சென்றார் அவர் ஓடி!

அரசியலில் கயவர்களின் வருகை
அறியாமைக்கு நாம் அளிக்கும் சலுகை.
நரிகள் ஆள வந்துவிட்டதால்
ஓநாய்எல்லாம் உயிர் குடிக்கும்
அரிமாக்களாய் வாழ்வதுவே பெருமை!

O

பெயரினுக்கு முன்பின்உள்ள பட்டம்
பீற்றிக்கொள்ளவே உதவும் அற்பம்;
நயத்தக்க நாகரிக
மாந்தனையும் நகைப்புக்காக்கும்
பயன் இலாத ஆரவாரச் சுற்றம்!

O

போட்டியிட்ட பாவலர்கள் நூறு
பொங்கியதோ பாற்கடலின் வீறு!
நோட்டமிட்டுப் பார்த்தபின்பு
நூற்றில் ஒன்று தேறியது...
பெயர்தெரியாப் பாப் புறநானூறு!

O

இன்பம் எய்த வேண்டும் என்றான் பொன்னன்,
துன்பந்தொலைய வேண்டும் என்றான் கன்னன்,
என்றும் இந்தப் போராட்டமா?
இருவருமே வாரீர் என்று
முன்னழைத்தான் மதுக்கடைக்கு நன்னன்!

ஈரிருபது ஆண்டுமூத்த வள்ளி
இருபதுக்கும் இளையள் என்றாள் கள்ளி!
பேரன் வந்து பாட்டி என்றான்
பேத்தி வந்தே ஆயா என்றாள்
சீறி நின்றாள் பேரிளம்பெண் துள்ளி!

o

இருட்டில் இன்பம் உள்ளதென்றான் துறவி
எத்துகளே இன்பம் என்றான் உறவி.
இருமனைவி, பெருமனைகள்—
எத் தொழிலும் வேண்டாம் என்றான்
அரசியலில் ஊறிவந்த பிறவி!

o

சமயநூல்கள் கற்பதினால் பத்தி
சாரும் என்று பற்பலநூல் பற்றி,
இமைதுறந்தான், ஊண்மறந்தான்
எடுத்ததெல்லாம் முடித்துவிட்டான்
அமைதியுடன் கடவுளின்மை வெற்றி!

o

திரைப்படத்தில் கற்பினள்போல் நடித்தாள்
சிலம்புதந்த காதை வாங்கிப் படித்தாள்.
வரிக்குவரி ஒழுக்கம் கண்டு
வாழ்க்கைக்குஇது தடையே என்று
விரைந்தெறிந்து, கொக்கோகத்தை முடித்தாள்!

சாதிமதக் கட்டெதிர்த்து நின்றான்
'சாதலடி காதல்இன்றேன்' என்றால்;
ஓதுபணக் காரப்பெண்ணாள்
உறவுவர மனம் திரிந்தான்—
தாதை சொல்லை மீறல்குற்றம் என்றான்!

O

ஊர்ப்பொருளைத் தன்பொருளாய்ச் சேர்த்தான்
ஒருவருக்கும் கொடுக்காமல் காத்தான்;
சார் குடிக்கும் கூத்திக்குமாய்ச்
சழக்கரசுக்கு ஈகையிலே
நேர்புரட்சி வந்தது பார், வேர்த்தான்!

O

ஞாயிற்றொளி எழுந்ததுவே கீழ்ப்பால்
நல்ல ஒளி பரவியது மேற்பால்.
ஆயினும் நம் வவ்வால்களும்
குருடர்களும் ஐயோ ஒளி
பாயவில்லை எனப்புலம்பும் ஓர்பால்!

O

திருடன் திருடன் என்று குரல் தந்தான்
தெருவில் சென்றோன் துணைபுரிய வந்தான்;
'இருப்பதினைக் கொடுத்துவிடு,
இல்லையென்றால் மாள்வாய்' என்று
'திருடன்' குரல் தந்தவனே நின்றான்!

பாவமன்னிப்பு வேண்டும் என்றாள் மாது,
பாதிரியார் ஒப்புக்கொண்ட போது...
'பாவம்செய்வோம் இருவருமே
பரம்பிதா மன்னிப்புண்டே
நீ வருவாய்' என அணைத்தார், தோது!

O

பூனைக்குச் சிறகுகளை இணைத்தான்
புரவிக்குக் கொம்புகளைப் பிணைத்தான்...
வானில் ஒரு பறவையில்லை
மண்ணில் மாந்தர் நிற்கவில்லை
ஏன் இதனைச் செய்தோம் என்று நினைத்தான்.

O

வஞ்சனையின் வடிவமான முத்து
வாயடியும் கையடியும் கற்று
விஞ்சி நின்றான் கவியரசாய்
விளம்பரத்தை நாளும்செய்து
வஞ்சமகள் போல மானம் விற்று!

O

திருமறைகள் ஓதிஓதிப் பார்ப்பான்
திருடிப்பொருள் அத்துணையும் சேர்த்தான்.
ஒருநாள் அவன் கனவினிலே
'உத்தவம்செய் நமக்கு' என்றதும்
உருவம் உயிர் இறைக்கேதென்று வேர்த்தான்!

மனைவிமக்களைக் கழுதை என்றான் பொறுத்தார்
மற்றவரைக் கழுதை என்றான் வெறுத்தார்.
அனைவரையும் கழுதையென்று
பேசியதால் ஏசியதால்
அனைவருமே 'கழுதை' என்றார் சிரித்தார்!

O

அமைச்சர் வந்து குருதிக்கொடை கொடுத்தார்
அடிபட்ட வள்ளலார்க்கதைக் கொடுத்தார்;
இமைப்பொழுதில் உயிர் பிழைத்தார்
இரவுக்குப்பின் விடிவு, பார்த்தால்
மருத்துவமனை காணோம், ஓட்டம் எடுத்தார்!

O

சட்டமன்ற விதிகளிலே ஒன்று
பொய்புகன்றார் எனச்சொலல் சால் பன்று;
இட்டமுடன் அமைச்சரெலாம்
உண்மையிலா மொழிபுகலச்
சட்டம் வைத்துக் கொண்டதுவும் நன்று!

O

இருமனத்துப் பெண்டிர்களை வளர்த்தான்
எத்துக்கெல்லாம் மூலமுதல் உளத்தான்;
திருடித் திருடிப் பாட்டெழுதித்
திரைபடத்துக் கழிகாமக்
கறுப்புப்பணப் பிள்ளைபெற்றுத் திளைத்தான்!

என்னதொழில் செய்கிருய்நீ என்றேன்
ஈடுபட்டேன் அரசியலில் என்ருன்;
உன்னுடைய வாழ்க்கை வரு
வாய்க்கு வழி என்னவெனில்
இன்னும் என்ன என்றெனயே கொன்ருன்!

O

நகைச்சுவை நூல் கிடைப்பதெங்கே என்ருள்,
நல்ல ஏட்டைப் பரிந்துரைக்கப் புகன்ருள்;
நகைச்சுவைக்கா பஞ்சம் இங்கே?
நாட்டமைச்சர் சொல்லும் செயலும்
நுகர்க என்றேன் நன்றி கூறிச் சென்ருள்!

O

கழிகாமப் பாட்டெழுதும் போட்டி
கல்விக்கழகம் அமைத்ததுவே கூட்டி.
எழுத்தாளர் எண்ணுயிரம்
எழுதலுற்ருர், திரைப்பாடல்
எழுத்தாளனைத் தேர்ந்தெடுத்தார் காட்டி!

O

வட்டம்ஒரு பெண்பார்த்துக் கொணர்ந்தார்,
மாவட்டம் மறுநாளில் புணர்ந்தார்;
அட்டியில்லை என்றமைச்சர்
ஆசைக்கொரு வைப்பெனவே
கட்டிஅணைத்து ஊரிலேபோய் மணந்தார்!

ஒருவருக்கும் தெரியாதென்றான் மூத்தன்
ஊர்ப்பொருளுக்கு உரிமைகொண்டான் எத்தன்.
கருவயிற்றை மறைப்பதுண்டா?
கழிவு நீரை நிறுத்தலுண்டா?
நெருப்பைப் பஞ்சால் மூடுகின்றான் பித்தன்!

O

பணத்தினையே மிதமிஞ்சிச் சேர்த்தான்
பலருழைப்பைப், பலகுடியைத் தீர்த்தான்;
தணல்புரட்சி நாட்டில்எழத்
தாழ்ந்தவர்கள் மேலுயரப்
பிணமாகத் தன்னினத்தைப் பார்த்தான்!

O

பூமாலை கையில்கொண்ட குரங்கு
போன்றதிந்த நாட்டாட்சி அரங்கு.
ஏமாந்த மக்களிடை
இறுமாப்புக் கள்ளருந்தி
ஏற்றதுபார், ஊழல்எனும் சிரங்கு!

O

பழந்தமிழே ஒரு சிலரின் பண்டம்
பதவுரைகள் இல்லாவிடில் முண்டம்;
இழந்தகாதல் மீட்பதுபோல்
எய்துகிற பட்டத்திற்கே
தொழுது போற்றி அடகு வைக்கும் தண்டம்!

வாழ்க்கை ஓர் ஆழி என்றான் நம்பி.
மகிழ்ந்து காதல் ஓடம்விட்டான் தம்பி;
சூழும் சாதிப் புயல்வீசப்
பொருளியலாம் சுறுதுரத்த
மூழ்கிவிட்டான் அந்தோஅவன் வெம்பி!

O

வீணையடி நீ எனக்கே என்றான்.
மெல்லியலை மீட்டி இதழ் தின்றான்;
வீணைக்குடம் இடித்தவுடன்
வீணடிநீ என்று சொல்லி
நாணிலி, வேறு ஒருத்திபின்பு சென்றான்!

O

தப்பான அரசியற்கே தாழ்ந்தான்
தன்னலத்தின் சுரண்டலிலே வாழ்ந்தான்;
வைப்பாட்டியை வாழவைத்தான்,
கைப்பிடித்த மனைவி விட்டான்,
இப்போது அவன் நோய்க்கடலில் வீழ்ந்தான்!

O

திறக்க முடியாது என்றார் கற்புக் கதவை
செந்தீ என்றார், செந்தேள் என்றார் உறவை;
அறம் அழிக்கும் ஆட்சியினர்
அரக்க மன ஊழலாரின்
உறவுக்காரி பகலிலேதான் விதவை!

தேர்தலிலே வெற்றியினை மணந்தான்.
தில்லுமுல்லுப் பரத்தைகளைப் புணர்ந்தான்.
பேர், உடம்பு கெட்டதுடன்
பெற்ற ஊழல் பிள்ளைகளால்
யாரையுமே வெட்கமற்றுச் சினந்தான்!

O

சிறுவயதில் கத்திப்பெற்றான் பாலை
சேர்ந்தரசில் திட்டிப்பெற்றான் மாலை...
நிறுத்திவிட்டான் சிலைகளினைச்
செங்குட்டுவன் பேரன் என்றே
சிறகினத்தின் கழிவறையாம் சாலை!

O

அதிகாரத்தின் வாளெடுத்தாள் ஒருத்தி.
அவளுக்காக, மாந்தர்களை வருத்தி,
மிதித்தழித்தாள். வாளினையே
மேனிகாக்கச் சுழற்றி நின்றாள்,
பிடிகழன்று கழுத்தறுத்தது நிறுத்தி!

O

அன்பைக்காண மறந்திட்ட ஓர் அழகி,
அரைகுறைகள், ஆரவாரம் பழகித்
தின்பதும், உடுப்பதுவும்,
திரைப்படமும் தேடித்தேடி
இன்றெருக்கு என்று இல்லாதாளுள் கிழவி!

மனைவி, மக்கள் இருக்கையிலே விரும்பி
மாதொருத்தி மீது காமம் அரும்பி,
மனைவி புதுக் காதலனைத்
தேடுகின்றாள் என்றவுடன்
மனக்குரங்கு மீண்டதடா திரும்பி!

O

வெள்ளம்கரை ஏறிவிடின், எறும்பு
வெள்ளம் வாழும் மீன்களுக்கு விருந்து!
வெள்ளம் வற்றி மீன்கள் நிற்பின்,
வீறுடைய எறும்புகட்கு
வெள்ளமீன்கள் அத்துணையும் கரும்பு!

O

நோயாளிகள் மருத்துவர்பா லிருந்து
மீளுவதே மாபெரிய மருந்து;
நோயில்லாத நாட்டு மக்கள்
நுகத்தடியை வீசிவிட்டுப்
போய் உரிமை நாடு கொள்வார் விரைந்து!

O

பாஞ்சாலி பதவியிலே இருந்தாள்.
பாண்டவர்கள் துய்ப்பினாலே இறந்தாள்.
வீழ்ந்தால்போதும் என்றிருந்த
கௌரவர்கள் விம்மி விம்மி
வாய்த்தழுதார், பாண்டவனும் இறந்தான்!

மரத்தில் 'கவிகள்' இருக்கும் என்றார் தந்தை,
மணிமலர்கள், சுவைக்கனிகள் விந்தை!
உரத்தகுரலில் வானொலியில்
ஊர்த்தலைவர் இறந்தார் என்று
நகர வரிசையில் கவிகளின்பெருஞ் சந்தை!

O

கற்பனையின் பொன்னுலகைத் தேடிக்
கனவுகளின் அற்புதங்கள் பாடிச்
சொற்கோலம் இட்டுவந்தான்
சூழ்உலகைத் தான்மறந்தான்
மக்கள் அவனைத் துறந்துவிட்டார் ஓடி!

O

நாடகத்தில் கோமாளிகள் இல்லை,
நாடகமா என்று நொந்தாள் முல்லை;
நாடு சிரிக்க அரசியலில்
நம் தலைவர் வந்ததினால்
நாடகத்தில் இல்லை அந்தத் தொல்லை!

O

பிடித்த நிகழ்ச்சி புகல்க என்றார் நன்னன்
விழா முழுதும் கண்டிருந்த கன்னன்,
அடிக்கும் மணிக்கு முன்பெழுந்தே
அனைவருமே ஒத்திசையில்
முடித்த நாட்டு வாழ்த்தே என்றான் பொன்னன்!

கள்ளர்குகை கோயில் என்றார் ஏசு,
காமக்கூடம் என்றார் காந்தி; காசு
கொள்ளைக்கிடம் என்றார் பெரியார்;
கொள்கையிலாக் கூட்டம் இன்று
கொலைபுரியும் சூழ்ச்சி இடம்; பேசு!

O

அறியாமையை அறியாமைகள் நம்பும்,
ஆட்சியே அல்லல்பட்டால் வெம்பும்.
தெரியாமையால் புரியாமையால்
செய்துவிட்ட தப்புக்கெல்லாம்
திரும்பிப் பார்த்துப் புரட்சிசெய்ய விரும்பும்!

O

குற்றங்களைச் செய்வதிலே அப்பன்,
குறுஞ்செடியும் காவலராய்க் குப்பன்
நிற்பதாக நடுநடுங்கி
நிழற்கும் அஞ்சிப் புல்தடுக்கிக்
குடங்கி வீழ்ந்தான் எதிரில் காவல் சுப்பன்!

O

பலமுறை நான் செத்தேன் என்றான் நடிகன்,
படங்களிலா என்று கேட்டான் பொடியன்;
இல்லை,இல்லை, நம் செய்தி ஏட்டில்
இறப்பு நிகழ்ச்சி பார்த்துப்பார்த்துக்
குலைதளர்ந்தேன் என்றான் நடிப்புத் தடியன்!

சிந்திப்பதே குற்றம் என்றான் மணியன்;
'செய்பணியில் அன்பு, நேர்மை சனியன்'
முந்துவதால் முழுக்குப் போட்டேன்
மூளை எதற்கு? என்கையிலே
வந்திடுக ஆட்சிக்கென்றான் முனியன்!

O

ஆண்டுக்கொரு குறைவிடுத்தால் ஆயுள்
நீளும் என்றார், ஓர் அறிஞர்; நோயுள்
நீண்டிருந்தவன் மனக்கணக்கில்
நினைத்துப் பார்த்தான் குறை ஆயிரம்
மூண்டு நின்றன, மூச்சுவிட்டான் பாயுள்!

O

தலைச்சோறு இல்லா உளறல்வாய்ச் செருக்கன்
தனைச்சேர்ந்தான், பித்தேறிய கிறுக்கன்;
நிலைகொள்ளாமல் இருவருமே
நிறைந்திருந்தார் எவ்விடத்தும்
குரைத்துவந்தார் என்ன செய்வான் அருக்கன்?

O

செந்தமிழால் பதவியினைப் பெற்றான்
செருக்கின் நுனிக் கொம்பேற லுற்றான்:
சிந்தனையின் செழிப்புள்ளார்
சேர்க்கைக்கு அஞ்சி மாற்றானிடம்
தந்துவிட்டேன் என்னையென்று விற்றான்!

உலகம் என்பது கலைக்களஞ்சியக் கொல்லை
உணர உணர விரியும் நமது எல்லை.
கலகக்காரர் சுரண்டல்காரர்
கண்ணற்றதால் அறிவற்றதால்
விலகி அந்தோ வீழ்ந்துபட்டார் தொல்லை!

O

பாட்டெழுதிக் குவித்து விட்டான் மீசை
பசியிருந்தும் புகழின் மீதே ஆசை.
வீட்டுமகள் விரட்டிவிட்டாள்;
விரைந்துழைத்தான்; அறிவு வந்தது,
ஓட்டமிட்டாள் புகழேங்கியாம் வேசை!

O

கொடுத்தறியான், கொள்ளையடித்தான் கஞ்சன்
கொடுமைகளால் பொருள்குவித்தான் வஞ்சன்,
படுத்துவிட்டான் பணத்தைப் பார்த்தே
பறந்துவிட்டான் மருந்துண்ணுமல்—
இடுகாட்டில் தான்புகுந்தான் தஞ்சன்!

O

'எல்லாம் எனக்குத் தெரியும்' என்ருள் சிறுக்கி
'என்னைவிடவா' என்றெழுந்தாள் செருக்கி.
எல்லோருக்கும் எல்லாம் தெரியும்
எளிய உடைத் திரைப்படத்தாள்
செல்வோம்பட்டி மன்றுக்கென்ருள் தருக்கி!

மருத்துவமும் பொறியியலும் படித்தால்
மண்டும்பணம்—சுரண்டல்கருவி முடித்தால்!
திருமணத்தால் பெண்ணும் பொருளும்
சேர்ந்தும், தொழில் தெரியாததால்
தெருவார், ஊரார் அனைவருமே துடித்தார்!

O

கடன் கொடுத்துக் கொடுவட்டியில் பிழைத்தான்
கடனுக்காக வழக்குமன்றுக்கு அழைத்தான்;
இடறி விழுந்தான் படிக்கட்டிலே
கடன்காரர் கை கொடுத்தார்.
அடடே எமன் இறப்புலகில் நுழைத்தான்!

O

உழைப்பு, கண்ணீர், குருதி, சாவினாலே
ஓங்கும் பல கட்சிக் கொடிகள் மேலே;
தழைக்கும் பொது வுடைமை பெருத்
தன்னலத்தின் தான்தோன்றிகள்
விழையும் கொடி விழா அனைத்தும் பாழே!

O

குடியாட்சி கொண்டெழுந்த நாட்டில்
குடும்பம் ஒன்று தொடர்ந்தாட்சிக் கோட்டில்
முடியாட்சியின் 'பரம்பரை' போல்
முட்டாள்களே தேர்ந்தெடுத்ததால்
விடியாக் கேலிக் கூத்தாம் வரலாற்றில்!

புத்தோவியக் காட்சி வைத்தான் கலைஞன்
பொருள்படைத்தார்க்கு அழைப்புவிடுத்தான் விலைஞன்;
சித்தாளாகும் திறமையற்றும்
திறந்து வைத்தான் கலை அமைச்சன்
பித்துப்பிடித்து வெளியில் வந்தான் கொலைஞன்;

O

கண்கள் இலாச் செவிட்டூமைச் சாத்தான்
கவிதை கவிதை என்றெதையோ யாத்தான்;
பெண், ஆண், அற்ற அலியறிஞன்
பிறந்து விட்டது' புதுக்கவிதை'
என்று புகழ்க் கானல் நீரில் நீத்தான்!

O

பத்தில் இரண்டு நல்லதென்றான் சோழன்
பார்க்க வேண்டும் அவற்றை என்றான் தோழன்.
செத்ததொன்று, சாகக்கிடக்கும்
சிறப்பு இரண்டு—மற்றதெல்லாம்
பித்தலாட்டப் பேய்கள் என்றான் வேழன்!

O

எச்சில் இலைக்கு ஏங்குசில நாய்கள்
'இதழ்மனையில்' இடம் பிடித்த பேய்கள்;
நச்சுமனக் கக்கல். அன்றி
நல்ல கருத்து ஏற்றிடாத
பொச்சரிப்புத் தாய், பொறாமைச் சேய்கள்!

வாயளவில் முற்போக்குப் பேசி
வாழ்க்கையிலே நற்போக்கை ஏசி
வாய்ப்புக்கேங்கிப் பாய் விரித்து
வல்லாண்மை காட்டுகிற
தாய்நாட்டின் அரசியலோ சீசீ!

O

வள்ளுவரை வள்ளலாரைக் காட்டி
வாய்மை கூறிக் காந்தியாரைக் கூட்டி
கொள்ளை விழா எடுத்துயர்ந்த
கோமகனின் உளவு கண்டேன்
கள்ளப்பணம் வெள்ளையாம்பே ரேட்டில்!

O

தாமரையின் மணம் நுகரச் சென்றேன்
தவளைகளே மொய்க்கக் கண்டு நின்றேன்
பூ மணமும் நுகரவில்லை,
மண்டுகட்கும் பயன் இல்லை,
தாமரையில் அழிந்ததடா செந்தேன்!

O

பிறந்தநாளை இறந்தநாளை வைத்து
பிதற்றுகின்ற பேச்சாளரை இணைத்து
துறப்பதற்கே அணியமாகத்
துடிப்பதைப் போல் விழா எடுத்தான்
சிறப்புடன் தான் விழாதிருக்க நினைத்து;

அமைதியாக எழுவதில்லை புரட்சி
அலைகடலே கொதித்தெழும் ஓர் எழுச்சி,
சுமை சுமையாய் ஏற்றிவைத்த
துயர் அழித்துப் பொதுவுடைமை
நமதிடையே மலரவைக்கும் கிளர்ச்சி.

O

வாய்ப்பில் வாழும் பச்சோந்திகள் கூட்டம்
வல்ல பணக்காரர்களின் கோட்டம்
நோய் அழிக்க வாள் எடுத்து
நொந்தவர்கள் கொதித் தெழுந்தால்
வாய் பிளந்தே எடுக்குமடா ஓட்டம்!

O

தங்கமான மாந்தர் என்றூர் சிரித்தார்
தங்கப் பல்லைக் காட்டி இதழ் விரித்தார்.
இங்கு அமைச்சுச் செயலாளரின்
இனிய பொன் விழாவினன்று
தங்கப் பாளக் கள்ளர் என்று பிடித்தார்!

O

ஊழல் ஊழல் என்று சொல்லிப் பிரிந்தான்
ஊருலகின் நீதிக்காகத் திரிந்தான்;
ஊழலுக்கோர் ஆய்வமைத்தார்
ஊழல் குரல் எழுப்பியவன்
ஊழலுக்கே சுரங்கம் என்றூர் மறைந்தான்!

குடும்பத்திலும், கொள்கையிலும் சண்டை
குப்பத்திலே உடைந்தனவாம் மண்டை
நடுத்தெருவில் மன்றுகளில்
நல்ல தொழிற் சாலைகளில்
தொடுக்கும் சண்டை வைத்தாள்மது முண்டை!

o

எதிரிதன்னை வெல்வான் என்று அஞ்சி
இடுப்பொடிந்தான், மனம் ஒடிந்தான் செஞ்சி!
புதர் அசைந்தால் 'புலி புலி, ஆ
போந்தது' என்று கிலி பிடித்தான்
முதுகிலாத முதலமைச்சன் கெஞ்சி!

o

செருக்கினாலே குடும்பத்தினை மறந்தான்
செம்மைதரு கல்வியினைத் துறந்தான்;
அருவருக்கும் அரசியலில்
ஆருக்கென்ன தெரியும் என்றான்
தெரிந்தெடுத்தார் அமைச்சனாகச் சிறந்தான்.

o

மனத்தினையே விற்றுவிட்டான் சேந்தன்
மாண்புக்கெல்லாம் அடிபிடித்தான் மாந்தன்;
இனத்தைக் காட்டிக் கொடுத்து விட்டான்
இழிவுக் கெல்லாம் பாய் விரித்தான்
இன்று கல்விக் கழகத்துணை வேந்தன்!

அரசாங்க உந்துவண்டி ஏறி
அவல முற வண்டிபல மாறி
புறப்பட்ட இளைஞனவன்
போய் இறங்கக் கண்டவர்கள்
இரக்கம் உற்றார் முதுமையினைக் கூறி!

O

ஒட்டக் கூத்தர் மீண்டும் இங்குப் பிறந்தார்
உள்ள பல ஏடுகளைத் திறந்தார்;
புட்டத்தில் கால்படவே
உயிர் பிழைத்தால் போதும் என்று
'புதுக்கவிதைக் காரர்' எல்லாம் பறந்தார்!

O

வருவாய் வரி அதிகாரி நான் என்றார்
வண்ணப்படக் காரிகண்ணால் கொன்றாள்.
திரும்ப, மனம் இல்லாமலே
திரை நடிகைக் காலழகில்
வருமானம் விட்டுத் தெரு நின்றார்!

O

பாண்டவரும், கௌரவரும் பிறந்தார்
பாரதத்தின் தேர்தலிலே பறந்தார்;
ஆண்டவர்கள் வாக்கெடுத்தார்—
கௌரவர்கள் ஆளவந்தார்
மாண்புகளாய் மாநிலத்தில் சிறந்தார்!

மனநோய் மருத்துவமனையில் ஒருநாள்
மாண்புகளே கலந்து கொண்ட திருநாள்
என்ன நடந்ததோ அறியேன்
இருந்த நாட்டின் குழப்பம் நீங்கிக்
கனவுப் பொதுவுடைமை வந்தது மறுநாள்!

O

மூன்று தமிழ் எழுத்தாளர் கூடி
முத்தமிழ்க்கும் தாமே உயிர் நாடி
யென்றுரைத்தார், இருவர் செல்லப்
"பொய் எதற்கு? நானில்லையேல்
சான்றே"தென்றுர் தனித்து நின்ற தாடி!

O

நீச்சலுடையில் நடிக்கமாட்டேன் என்றுள்
நெறி பிழையாக் கற்பினள் போல் நின்றுள்.
பேச்சொழித்துப் பணம் எடுத்தார்...
பேசவில்லை திரைநடிகை
நீச்சலுடையும் அவிழ்த்து அவரை வென்றுள்!

O

காந்திதலை நாணயத்தைப் பார்த்தான்
கள்ளருந்த மனமின்றி வேர்த்தான்;
ஏந்து மதுக் கொணர்ந்தவரின்
எண்ணம்வர, நேருதலை
போந்த பணம் தந்து கள்ளைச் சேர்த்தான்!

பொய்புரட்டின் அரசியலில் வாழ்ந்தோன்
போனநாளின் நினைவினூடே ஆழ்ந்தான்;
மெய் நடுங்க, ஊழல் நோய்கள்
மிக நெருக்க வலுவிழந்தே
ஐயோ ஐயோ எனப்பதறி வீழ்ந்தான்!

O

'அனைத்தையுமே அறிந்தவர் எம் அப்பா
அடுத்துள்ளவன் நான் ஒருவன் தப்பா?'
எனப்புகன்றான் கல்லாடன்; சரி
எவர் எழுதியது கல்லாடம் என்றேன்
வனக்குதிரைக்கு அடிப்பதென்றான் சுப்பா!

O

காய்ச்சலிலே படுத்துவிட்டான் மல்லன்
கடிதழைத்தான் மருத்துவரைக் கல்லன்;
காய்ச்சலிது நூற்றிரண்டு
மருத்துவமனைக்கு ஏகு என்றதும்
மீஉயர்வுப் பதிவேதென்றான் புல்லன்!

O

சாத்தானுக்கு உடம்பெல்லாம் சிறங்கு
சத்துணவுத் திட்டவூழல் அரங்கு;
மாற்றான் மனைவி பொய், புரட்டு
மதுவிலக்கு, தீங்கரசை
ஏற்றுவந்தான் நடிகன் 'காமக் குரங்கு!

தற்பெருமைப் பாட்டுக்களை நுழைத்தான்
தற்செருக்கை நாடகத்தில் அழைத்தான்,
தற்புகழை எழுத்தில், பேச்சில்
தாளிகையில் தந்து வந்தான்
தப்பானவர் தாம் புகழப் பிழைத்தான்!

O

தாக்கிற்றுநோய் உடன் இறந்தது அரிமா,
தலை இழந்தும் உயிர் வாழ்கிறதாம் நரிமா;
போக்கிலிகள் பொய்மை கூறிப்
புட்டரசுத் தேர்தலிலே
நோய்க்கிரைத்தார் கோடிபணம் பொரிமா!

O

கூண்டுக்கிளி பறந்துவிட்டது வானில்
கொண்டாட்டம்தான் காதலுற்றது தேனில்!
கூண்டின் வெறுமை கண்டு பரத்தை
கோட்டான் ஒன்றை அடைத்து வைத்தாள்
மாண்பு வந்து மகிழ்வடைந்தான் ஊனில்!

O

மானின் விழி அழகை எண்ணி சிறுத்தை
மாற்றிடுமா சொல்லுகிற கருத்தை?
வான்வில் வண்ணக் கிளி மரத்தில்
வந்தமர்ந்தால் திருட்டுப்பூனை
தான் மகிழுமா புரட்சியின் எழில் குருத்தை?

தொலைக்காட்சி என்றொலிக்கச் சொன்னேன்
தொல்லைக்காட்சி என்று பேரன் சொன்னான்;
பலுக்கினான் வானொலியை
வீணொலி என்று ஆர்வமுடன்
நிலையத்துண்மை அறிந்தென்னையே வென்றான்!

O

பாம்பனைத்தும் வடிவம் ஒன்று போலே
பாராளுவோர் அமைச்சர் என்பதாலே
நாம் மகிழ்ந்தோம் வாக்களித்தோம்
நச்சு மனப்பான்மையினர்
தாம் யார் என்று காட்டிவிட்டார் மேலே!

O

சந்தனக்காட்டை கடந்துவரும் காற்று
தழுவும் மணம் குளிர்ச்சி மருவும் ஊற்று!
சிந்தனைக்காகும் செந்தமிழ்ப்பாட்டு
சிலிர்த்தெழுந்த புரட்சிக்குப்பின்
தந்து மகிழும் இன்னலத்தின் நாற்று!

O

களிற்றுயானை மீதிருந்தான் செல்வன்
கழனியெல்லாம் பாழ்படுத்தினான் கள்வன்!
பிளிற்று வண்ணம் தோட்டிகொண்டு
பெருமிதத்தால் குத்திவிட்டான்
பழிக்குப்பழி வாங்கிவிட்டது கொம்பன்!

மத்தாப்பூ கொளுத்துகையில் கோடி
வானவில்லின் சிலிர்ப்பளிக்கும் கூடி.
எத்தாட்சியின் தேர்தல் கொள்கை
எத்தனை வண்ணம்! நிலைக்கவில்லை.
முத்தொளியாய் அகலெரிந்தது நாடி!

O

வீரப்போரில் இறந்தது நல் அரிமா.
வீரம் பேசியே அரத்தம் குடிக்கும் நரிமா
சாரும் நோயால் சாவணைக்கையில்
சார்ந்த நரிகள் தேர்தல் எண்ணி
ஈரிரு கோடிச் செலவில் சென்றது வெறிமா!

O

புரட்சி என்பது கட்டிளமைக் கூறு,
பொங்கி எழும் எரிமலையின் வீறு!
புரட்டருக்கு வெடிமருந்து
பொருளாளிக்குத் தாக்கும்படை
பொதுவுடைமைக் காரர்க்குக் காட்டாறு!

O

அறிவுக்கொவ்வா திரைப்படத்தில் நடித்தான்
அரசியலில் அதிகார மது குடித்தான்:
வெறியனுகி நாடழித்தான்...
வீறிட்டெழுந்த மக்களின்முன்
சிறியனுகி தனது வாழ்வை முடித்தான்!

உலகத்தினும் உயர்ந்த நூல் ஒன்றில்லை
ஓதவேண்டும் என்ற அறிஞன் சொல்லை,
கலகக்காரர் கேட்கவில்லை
கருத்து முதல் வாதிகளின்
இலக்கியத்தால் விளைந்ததுவே தொல்லை!

O

நோய்கள் தின்று, நாறும் சாவு வேண்டேன்
நொடியில் வரும் பகை இறப்பைத் தூண்டேன்;
போய் அரசுச் செலவினிலே
பொய்உயிராய் வாழ்வதினும்
சூழ்புலிகள் நூறுவரக் காண்பேன்!

O

சமயம் எனும் சதுப்பு நிலத்தூடு
சாதிமதக் கருத்துக்களாம் பூடு
தமதுழைப்பால் விளைந்ததென்று
தாம் மகிழ்வார் பூரியர்கள்;
சமன்மை விரும்பும் மக்கட்குமுட் காடு!

O

நாட்டுப்பற்றை முதலிலேயே மறந்தான்
நவிலும் மொழிப் பற்றினையும் துறந்தான்
நாட்டமைச்சாய் இருப்பதற்குக்
காட்டிக் கொடுத்து வாழலுற்றான்
நாட்டு மக்கள் விழிக்குத்தப்பி இறந்தான்!

பொருளில் இல்லை காண்பவரின் கண்ணில்;
பொங்கும்அழகு வாழ்கிறதாம் மண்ணில்;
கருத்துரைத்த அழகன், ஒருத்தி
காதலுக்காய் வீடு சென்றான்
குரைத்தது நாய் அழகன் உடல் புண்ணில்!

O

இயற்கை வாழ்வை நீங்கிவிட்டால் தாய்,தான்
இழந்து விட்ட ஏதிலியாம் சேய்தான்.
செயற்கை நண்பர் சேர்க்கையாலும்
சிறுமைக்குரிய பழக்கத்தாலும்
மயற்கையிலே நமக்குறவு நோய்தான்!

O

பகுத்தறிவும் அறிவியலும் காலம்
பற்றிவரும்; முன்னேறிடும் ஞாலம்.
தொகுத்தபழங் குப்பையுடன்
தோய்ந்திருப்பார் வாழ்வனைத்தும்
மிகு புயற்குக் குட்டிச்சுவர் கோலம்!

O

ஏட்டினிலே போட்டு விட்டார் சட்டம்
எண்ணூறு பேர் குழுவமைத்த திட்டம்;
நாட்டில் நடை முறையில் இல்லை
வீட்டினுக்கும் நன்மையில்லை
தீட்டியதால் கொழுத்தது அரசு மட்டம்!

திரை நடிகை ஒருத்தியுடை தளுக்கில்
தேர்தலிலே அரசமைத்தான் குலுக்கில்;
கரையிலாத பாஞ்சாலியால்
கட்சிக்குள்ளே ஆயிரம் நோய்,
விரைந்துவிட்டில் விழுந்ததடா விளக்கில்!

O

கொலைக்குக் கொலை நடந்துவிட்ட போது
கொலைப்படையை ஏவி விட்டான் கேது:
கொலைக்களங்கள் காணுவதில்
கோமகன்கள் காந்திபேரால்
நிலைத்துவிட்டார் நாய்நரிக்குத் தோது!

O

இனங்கள்பல மொழிகள் பல நாட்டில்
இணக்கம்இலா ஒருமைப்பாட்டுக் கோட்டில்
தனக்குள் பொதுமைக் கொள்கையிலாத்
தலைகொழுத்தார் வந்ததினல்
முனைப்பொற்றுமை பறக்குதடா காற்றில்!

O

உயிர் துறந்தாள் நாட்டுக்காகத் தாயார்
உலகம் சுற்றினன் தீரா நோயால் சேயார்;
உயிர்பிரிந்த தாயை அறியான்
அறிந்தால் உயிர் பிரிந்திடுமாம்
பயல் இவனுக்கு நிகரும் உண்டோ தீயார்?

வேலியற்ற தோட்டமானுள் மாது.
விரைந்து கட்சியில் சேர்த்துவிட்டான் சேது.
கூலிக்கழும் கொள்கையிலாக்
கூட்டத்தினர் மேடையிட்டார்;
தோளில் மாலை; நோய்ச் சுரங்கம் இப்போது!

o

இலக்கணங்கள் எண்ணங்கட்கு வேலி
என்றுசொன்னான் பெற்றோர் அறியா வாலி.
விலக்கிடுக முன்னோர் நெறி
விளையும்புத் திலக்கியம் என்றான்
இலத்தரசியும் விலக்கி விட்டாள் தாலி!

o

இளைஞரெலாம் போர்ப்படையின் ஈட்டி,
இனியபொது வுடைமைக்குவழி காட்டி,
வளைந்திடாத எஃகுப் பாளம்,
வானளக்கும் விண்கணைகள்
நிலைக்கும் நட்பின் அமைதிப் போரின் தோட்டி!

o

உலகறிய வேண்டுமென்ற முறையில்,
நாட்டு மன்ற உறுப்பினரை விரைவில்
பலரை வெளி நாடனுப்ப...
பகலிரவாய்ச் செய்ததினால்,
பலரும் கள்ளக் கடத்திலினால் சிறையில்!

எப்பரிசும் தனக்கே என்றான் அகிலோன்
இந்திராணியாய் இருந்திட்டான் முகிலோன்;
தப்புடைய பரிசுக்குழு
தாளில் விழ ஒத்துழைத்தார்.
இப்போதுயிர் பரிசுக்கேங்கும் திகிலோன்!

O

பொருள் சுரண்ட படம் எடுத்தான் முத்தன்
பொதுமக்களை என்ன நினைத்தான் பித்தன்?
குருதி விரும்பி வாளை நக்கி
குரைத்தழுத நாயெனவே
தெருவிலலைந்து கல்லடி பட்டான் எத்தன்!

O

வடபுறத்தில் துறவிகளின் மடமாம்
தென்புறத்தில் கன்னிமாடம் திடமாம்!
இடை நடுவில் ஈரர்ண்டில்
எழுந்தது பார் புது விடுதி
அட, அநாதைக் குழந்தைகளின் இடமாம்!

O

மனைவிமார்கள் கடவுள் காதைக் கடித்தார்.
மகவுவலி ஆணும் கொள்ளப் பிடித்தார்;
இனி திசைந்தார் இறைவன். இவர்
இங்குப் பிள்ளைப் பெறுகையிலே
கணவரல்ல, வேலைக்காரர் துடித்தார்.

2

வேதகால முனி ஒருவன் வந்தான்
விந்துபல ஊறிய இந்துவோ உ வந்தான்.
ஓதுபல 'சாத்திரம், சுருதி,
உபநிடதம், புராணம், கீதை' தந்தான்.
வேதமுனி ஏதும் காணுன்
விட்டால் போதும் என்றுசொல்லிப் பறந்தான்!

O

இந்துமகள் என்ெருருத்தி சொன்னுள்
எண்ணரிய நோய்க்கிடமாய் நின்றுள்;
எந்தவிதம் இத்தனை நோய்
வந்ததென்று கேட்கையிலே, புண்ணுள்
முந்துபல நூற்றுண்டாக
வாழவேண்டி முனைந்ததினுல் என்றுள்!

O

செத்த மொழிச் சொற்கள்பல நூறும்
சேர்த்தமைத்த பாடல்மணல் ஆறு;
மெத்தக் குதித்து இன்னிசையில்
மிதந்து செல்வேன் என்று பல வாறு
கத்திக்கத்திப் பாடினுன் பின்
கால்கள் பட்ட இடமோ பழஞ் சேறு!

இரண்டு கோடி பரிசுக்காக ஏங்கி,
ஈராயிரம் கொண்டிருபதூரில் வாங்கி,
திரண்ட பரிசு தனக்கெனவே
திளைத்திருந்தான், பரிசு விழுந்தது தேங்கி;
மிரண்டிடாமல் வாங்கிவிட்டான்
மீண்டுவிட்டது கள்ளச்சீட்டென்று ஓங்கி!
O
ஊரார் வீட்டுத் திருமணத்தில் விருப்பு;
உண்ணுவதில் முந்தியவர் இருப்பு;
நேராகப் பின் வாழ்த்திவிட்டு
நிற்கமாட்டார் பொழுது போக்கில் வெறுப்பு.
பாராதீர் நீர் பழசைவிட்டுப்
புதுமை கொள்ளும் கால்களிலே செருப்பு!
O
இராமலிங்கர் அடிகளவர் பேரால்
இருந்த கடை, கூட்டங்கண்டேன் நேராய்;
பராவி வழி பாட்டுடனே
பத்தர்களே நிறைந்தார் எனச் சீராய்த்
துழாவிச் சென்றேன் அருட்பாக் கூட்டத்
தொண்டர்களே இறைச்சிக்கடை பாராய்!
O
நண்டு ஒன்றைக் கொண்டுவந்தார் நாட்டார்;
'நாள், கிழமை தெரிவதில்லை' வீட்டார்.
எண்டிசையும் வியக்க இதை
நேராய் நடக்கச் செய்வேன் என்று போட்டார்.
கண்டவர்கள் சிரிக்கப் பெரும்
கள்ளுண்டான்போல் குறுக்க நடக்கப் பார்த்தார்!

'நடப்பதினும் இருப்பதுவே இன்பம்;
இருப்பதினும் படுப்பதுவே இன்பம்;
கிடந்திருந்து விழிப்பதிலும்
கிறங்கி நன்கு உறங்குவதோ இன்பம்'.
மடப்பயலே சிறந்ததொன்று
மடிவதுவே மண்ணினில்பே ரின்பம்!

O

'எழுந்துவந்தால் உடைத்திடுவேன் பல்லை;
என்னிடத்தில் காட்டேல் வீரச் சொல்லை;
விழுந்திடுவாய் சென்றிடு' என்று
வீரமணி எடுக்கப் போனான் கல்லை;
அழுந்தக் குந்தி இருந்தவனை
அள்ளப் போனேன் அவற்குக் கால்கள் இல்லை.

O

மருத்துவப் படிப்புக்கு இடம் தேடி
மனுடி இட்டான் அமைச்சரிடம் பாடி;
மறுத்து விட்டார்; ஆனால் அவர்
மயிர்ச்சடை நாய்க்கு இட்டான் இறைச்சி; ஓடித்
திரும்புகையில் பணப்பை இல்லை...
சேரும்படி ஆணை வந்தது நாடி!

O

பத்து காசைப் பாதையிலே கண்டான்,
பாதம் வைத்து நண்பனைச் செல் என்றான்.
ஒத்த நண்பன் சென்றபின்னர்
அக்கம் பக்கம் உற்றுப் பார்த்துக் கொண்டான்;
பத்துகாசைக் குனிந்தெடுத்தான்
சட்டைப் பையில் புதிய ஓட்டை கண்டான்;

நாற்பதுநாள் மருந்துகளைத் தந்தார்
நடுவழியில் பெற்றவரோ இழந்தார்;
பாற்கலந்து சாப்பாட்டினும்
பலன் தரும் நோய்க்கு என்பதை நினைந்தார்.
நாற்பது நாள் பாலருந்தி
நலம் அடைந்தார் மருந்தின்றிச் சிறந்தார்!

O

ஆதாயமும் புகழும் போட்டி இட்டன
ஆள் பிடித்துக் கால்பிடித்துத் தொட்டன;
ஏதாகிலும் செய்து பிறர்
எள்ளிடினும் தன் மானத்தை விற்றன.
கோதானாலும் கொள்கை இல்லாக்
கூத்தாடியின் பரிசு—பட்டம் பெற்றன.

O

வழியடைத்து வேலியிட்டான் குப்பன்
வலிந்து தாண்டிப் 'புதுக்கவிதை' அப்பன்,
குழிவிழுந்து, கால் இழந்து
கோலைக் கொண்டான்; வழிதிறந்தான் உப்பன்.
வழிவிடுத்து வேலி தாண்ட
வேறுவழி கண்டெழுந்தான் அப்பன்.

O

கடவுள் நினைத்தால் சேவல் முட்டை இடுமாம்
காணும் முட்டை மிகப்பெரிய வடிவாம்.
கடனைக் கேட்டுச் சேவல் கொண்டு
கணக்கில்லாத கோயில் ஏறிப் படிவான்,
கடவுட்கே நேர்ந்து விட்டான்
கடவுட் பூசாரி வயிற்றுக்கு அது விடிவாம்!

தாய்மொழிக்கே முதன்மை என்றான் செழியன்
சட்ட மன்றிலும் தீர்மானித்தான் விழியன்;
போய்ப் பார்த்தால் அமைச்சர், மன்றோர்
புதல்வரெலாம் அயல்மொழியின் வழியர்.
ஏழை மக்களை ஏமாற்றியே
இங்குயர்ந்தார் ஆளவந்த பழியர்!

O

கடவுள்சிலை கண்டு மகன் வணங்கான்
கடவுளையே வடிப்பது என்றன் மகன்தான்;
உடலுழைப்பே இலாதவர்கள்
உன்னை என்னை ஏமாற்றிடும் குணத்தார்,
கடவுள் என்று சொல்லித்திரிவர்
கடவுள் பேரால் சுரண்டல் எல்லாம் பணந்தான்!

O

'குடிப்பதனால் குடி குடியைக் கெடுக்கும்'
குறித்த பலகை கடைகள் தோறும் கிடக்கும்;
குடி கெடுக்கும் மது வகையைக்
கோடிப் பண ஏலத்திலே கொடுக்கும்
குடியரசில் ஆளவந்தார்
குடிக்க வகை செய்துயிரை எடுக்கும்!

O

காக்கையை ஏன் சனியன் என்று சொன்னார்?
காளிமுத்துவைக் கேட்டு விட்டார் மன்னார்;
'போக்கிலிலே போடா போயிக்
கோயில்புறா ஏறிப் பிடி' என்றார்.
போக்கறிந்தான், புரிந்து கொண்டான்
காக்காய்கறி சமைத்து எவரும் தின்னார்!

சமயம் என்ருல் என்னவென்ருன் திண்ணன்
சழக்கர் நச்சு வலேயே என்ருன் கண்ணன்.
சமயம் இன்றேல் வாழ்க்கை இல்லை
சாதி, மதம் இறை சமைத்ததென்ருன் வண்ணன்,
சமயச்சண்டை; தேர்தல் வந்தால்
சமயத்திற்கு ஒரு கட்சியிலே அவன் அண்ணன்!

O

உழைக்காது உண்ணத் திட்டமிட்டான் மாரி
ஆளும் கட்சி ஒன்றில் சேர்ந்தான் கோரி;
குழையும் நாயும் தோற்கச் செய்து
கோடைஇடிப் பேச்சாளனுய் மாறி,
நுழைந்துவந்தான் செல்வத்திலே,
நொடிந்து செத்தான்; மனைவி, விபசாரி!

O

குருதியுறுஞ்சும் கொடிது எது என்ருள் அல்லி
கொசுதான் என்ருள் சிறுமி பவழவல்லி.
இருப்பதிலே முகட்டுப் பூச்சிக்கு
இணையில்லை என்ருள் மற்ருேர் செல்லி;
இருக்கிறதே என்று கோதை,
இயம்பினுள்: 'குருக்களே ஆட் கொல்லி'.

O

தேனீயை வரவேற்றன பூக்கள்,
செம்மனத்தார் கண்டுவந்தார் பாக்கள்;
ஓநாய் எல்லாம் ஆளவந்ததும்
ஓடியது; ஊர் தெரு அனைத்தும் தீக்'கள்';
நான் நீ என்று 'நவகவிதை'
தேவைக்கு எங்கும் திரிந்துவந்தன ஈக்கள்!

தஞ்சைக் கோயிலை வாங்குவேன் என்றான் பித்தன்
தான் அதனை விற்கேன் என்றான் முத்தன்.
தஞ்சையின் செய்தி 'நிருபர்' உடனே
"தமிழகத்தின் கோயில் எல்லாம் மொத்தம்
வஞ்சகமாக விற்கப்பட்டன..."
வாசித்த செய்தியால் அமைச்சரிட்டார் சட்டம்!

O

துண்டணிந்தே உவமை உளறும் சோலை,
தொடைக்கும், தோட்கும் இடையிலாடும் மாலை;
கண்டொருத்தி கால்பிடிக்கையில்
கதவைத் தட்டினான் மற்றோர் காய்ந்த ஓலை;
துண்டெடுத்துத் தோளிலிட்டுத்
தெருவில்வந்தான் துலங்கிற்றவள் சேலை!

O

கெட்டவராய் இருப்பின் வியப்பில்லை,
கேடுகெட்ட அரசியலின் எல்லை,
முட்டாள்களைத் தேர்வதிலும்
முனைத்தரசு ஆள்வதினும் தொல்லை,
வெட்கமற்று வாய் கிழிய
வெற்றறிவைக் காட்டல் வியப்பெல்லை!

O

வைப்பாட்டியாய் மூன்று மாதம் இருந்து
மாற்றானோடு சென்றாள் மருக்கொழுந்து.
கைப் பணத்தைக் கொண்டபின்பு
கண்டவர்பின் சென்று தன்னைத் துறந்து
தப்பாய் வாழ்ந்தான் கணவன் என்று
தலையில் அடித்துக் கொண்டாள்; ஊரார் விருந்து!

சொல்லே ருழவர் மக்கள் நெஞ்சை உழலாம்,
தூய அன்பால் உண்மை வாழ்வு எழலாம்,
நல்லேருழவர் ஓரிருவர்
நாட்டிலுண்டு அவரைக் கண்டு தொழலாம்.
புல்லேருழவர் போக்கிலிகள்
புகுந்துவிடின் மக்கள் மனம் விழலாம்!

O

"புத்தகம் நூறு எழுதினையே சாற்று
புதினத்தானே, புலவா" என்றேன் நேற்று;
சுற்று முற்றும் பார்த்தவர்கள்
சொன்னவிடை கேளீர், உண்மை நாற்று:
"புத்தகங்கள் எங்களுடைப்
பொய்மைகளின் வற்றிடாத ஊற்று"!

O

அயல்மனையை விழைந்தவனைப் பார்த்தேன்,
அரசியலில் ஆளவந்தான் வேர்த்தேன்.
மயக்கு திரைப் படத்தை வைத்தே
மக்களினை ஏமாற்றினான் ஆர்த்தேன்;
வியப்படைந்தேன், உண்மையிலே
வெற்றறிவைக் காட்ட, முகம் வேர்த்தேன்!

O

பொய்யை அரியணை ஏற்றியது நாடு
புனைசுருட்டே சட்டமன்றப் பீடு;
நைந்தலறி மக்கட்காக
அறிஞர்சிலர் விழிப்புணர்ச்சி யோடு
கைத்திறனைக் காட்டினார்கள்.
கண்டபயன் அவர்க்குச் சிறை வீடு!

தன்னறிவைத் தான் புகழ்ந்தான் அருமை!
தமிழுக்கே அவனால் தானும் பெருமை;
தன்றன் அறியாமையினைத்
தாள்கள் தோறும் தருகிறனே சிறுமை,
என்றெண்ணி இருக்கையிலே
இவனைவந்து தழுவியதோர் எருமை!

O

ஆன்றவிந்த அறிஞர்களின் பாதை
அடர்ந்த மரக் காட்டுமலைச் யோடை;
தோன்றுசல சலப்பின்றித்
தூய்யமணத் தென்றல் தவழ்மேடை!
தான்தோன்றி தன் வாய் திறந்தான்
தாங்கவொணுத் தற்புகழ்ச்சி வாடை.

O

புரட்சி' பட்டம் நடிகைக்கு என்றோர் அழைப்பு;
புரட்டமைச்சர் பேச்சிலென்ன தழைப்பு!
"புரட்சியென்றால் நடிப்பில், உடுப்பில்
புரண்டணைக்கும் கிளுகிளுப்பில் மழைப்பு;
வறட்சியின்றி ஐம்பதாண்டாய்
கதாநாயகி வழங்கினார்" என்றார், பிழைப்பு!

O

பன்மொழியில் புலவர் எங்கள் கவிகள்
பட்டுப் போகும் உங்களுடைச் செவிகள்;
தன்மொழியின் சொற்கள் விட்டுத்
தாவி அயல் சொற்களினால் கவிகள்
தம் வழியில் யாத்திடுவார்
தந்த பொருள் அத்தனையும் அவிகள்!

வெகு நூல்கள் படித்ததில்லை; போனால்
வெளியுலகும் தெரியாது; ஆனால்
தகுதியிலாப் போலிகளின்
தாளத்திலே கழித்துவிட்டான் வாணன்;
வெகு நேரம் மேடை ஏறிப்
பேசமட்டும் கற்றுக்கொண்டான் தானாய்!

O

ஓ நாயினைப் பிடித்து வந்தாள் குறத்தி
ஒழுங்குபடத் தன்னுடன் வற்புறுத்தி,
ஆனாத நல் அன்புடனே
அறிவுரைகள் நல்லுணவும் அருந்திப்
பேணா வகை பேணினாலும்
பிடித்தோடிற்றே கோழிகளைத் துரத்தி!

O

பதினொரு பேர் ஆடுகிற ஆட்டம்
பத்தாயிரம் பேர் பொழுதழிக்கும் கோட்டம்.
முதிரா அறிவு முட்டாள் எலாம்
பகரவீயில் மொய்த்துவக்கும் ஈட்டம்!
உதவாக்கரை பயல்கள் உடல்
உதறி உதறி எடுப்பதுவா ஓட்டம்?

O

தகுதி தரம் இல்லை என்ற போதும்
தறுதலைகள் கூட்டம் கொண்டு மோதும்
மிகுதியான ஆட்சியிலே
மேம்படுமா நாடு, மக்கள் யாதும்?
வெகுளி எனும் குதிரை ஏறி
விரட்டிடுவார் விளையும் வறுமை தீதும்!

காகத்தினை வழிகாட்டியாய்ப் பெற்றுக்
கடலுலகைக் காண ஒரு சுற்றுப்
போக எண்ணிப் பூரிப்புடன்
புறப்பட்டான் இருக்கும் பணி விட்டு;
ஆக அது சேர்த்த முதல்
அரிய இடம் செத்த நாயின் புற்று!

O

சீற்றமுடன் பழிவாங்கலும் தேடிச்
சிறுமைகளாம் குட்டிகளைப் பாடி,
ஆற்ளுெணுத காமத்திருல்
அறியாமையின் தலைமையினை நாடி,
நோற்றதிருல் கொடுமை எனும்
நூறுபிள்ளை பெற்றனரே கூடி!

O

வட்டிக்கு மேல் வட்டிபெறும் செட்டி
வஞ்சனையில் பணம் சுரண்டும் கெட்டி;
எட்டி வங்கி பார்த்ததில்லை
இட்டுவப்பான் மறைத்து வைப்பான் பெட்டி;
குட்டித் தேளால் கொட்டிச் செத்தான்
கட்டிலின் கீழ் அறையில் பணத் தொட்டி!

O

முன்னிரவில் எல்லோருக்கும் விழிப்பு,
முதலிரவில் காதலர்க்கு விழிப்பு,
பின்னிரவில் அரசியலார்,
பிழைத்திருடர் கூட்டத்திற்கு விழிப்பு!
புன்மைகளால் நோயுண்டவன்
பொருமையர்க்கோ எவ்விரவும் விழிப்பு!

கரடி கிழமானது வயது எட்டிக்
கண்டது பேரப்பிள்ளைத் தன்னைச் சுற்றி,
புரட்டி ஆடி மகிழ்ந்திருந்தது.
'புட்டபர்த்தி' தலைபோல் முடி பற்றி
உரமற்ற கிழக் கரடியினை
உலுக்கி விளையாடியது குட்டி!

O

நோய்க்கிரண்டு வைப்பாட்டி மார்கள்
நூறு வயதும் ஆளை விழுங்குவார்கள்;
தாய்க்கிழவி சமைத்ததெலாம்
தணியாதுண்டு நன்கு கொழுப்பார்கள்;
போய் அணைத்துப் பொருள் பறித்துப்
புத்துணர்ச்சி தந்து களிப்பார்கள்!

O

திரைப்படத்து விளம்பரங்கள் தெருவில்
திரௌபதியைத் துகிலுரித்த உருவில்!
பரத்தையரும் கூசுகின்ற
படங்கள் கண்டார் கலையமைச்சர் அருகில்;
உரைக்கவொணு மகிழ்வில் ஆழ்ந்தார்
உந்து வண்டி மோதி விழுந்தார் சருகில்!

O

ஒவ்வொரு நோய்க்கும் மருத்துவர்பால் ஓடி
மருந்துண்பான் தெரிந்த புண்ய கோடி.
ஒவ்வொரு வழக்கும் முற்றவிட்டு
வழக்குரைஞர் பற்பலரைத் தேடி
எவ்வளவோ பொருள் இழந்தான்
இன்றடங்கி விட்டான் உயிர் நாடி!

தப்புக்கெல்லாம் புகலிடமாம் சேரன்
சாக்கடையாம் சமூகத்திலே வீரன்,
குப்பைக் கூள அரசியலில்
கொள்ளையடித்துக் கொடுத்துயர்ந்தான் வீரன்!
இப்போது அவன் மக்கள் பணம்
இருகோடியில் உடல் தேற்றும் தீரன்!

O

இளவழகன் பிறந்த ஊரோ கலவை
இன்று பல்கலைக் கழகத்திலே சலுகை
உளதாம் ஒரு சாதியினால்
உள்ளீடற்றும் இடம் பிடித்தான். செலவை
எளிதில் செய்யான் விருந்தழைப்பில்
இருப்பதெல்லாம் தின்னக்கேட்பான் பலவகை!

O

திரைப் படத்தில் நடிப்பதற்குச் சென்றான்
சிறந்த சண்டைக் களத்தில் கட்டிப் புரண்டான்;
உரைக்கவொணா எரிச்சலோடும்
உடம்பெலாம்புல் லரிக்கிறதே என்றான்.
திரைக்கதைஞன் 'ஆகா' எனச்
"சீச்சீ, தரைப் புல் அரிக்கிறது என்றான்!

O

அதிகாரத்தின் இடங்கிடைத்தால் நோய்தான்
அருமை மக்கள் வாழ்வுணரா வாய்தான்,
குதிப் போடோங்கும் கீழாட்சிக்குக்
குடை பிடிக்கும்! மேலுயரப் பாய்தான்!
குறிக்கோளற்ற பாழாட்சியில்
கோணலறிவு கொண்டவர்கள் நாய்தான்!

இசைக்குப்பின் சொல்லடுக்கும் புலவன்;
எட்டுக் கால்களால் நடக்கும் அலவன்;
விசைக்குதிரை பின்நிறுத்தி
முன்னால் வண்டி இணைக்கின்ற வலவன்;
திசைக்குந் திசை சொல்லும் பொருளும்
திக்கித் திணறும் கும்மிருட்டுப் புலவன்!

O

ஒருத்தியினைப் பின்தொடர்ந்தான் நாடன்
இருவரின் பின் பட்டிமன்ற மூடன்;
இருவர் என்ன? முந்நூன் சென்றான்
இசைந்த பொருள் முதலாளியாம் வேடன்!
உருவம் பெண்ணாய் இருந்தால் நூறு
போதும் என்றான் படம் எடுக்கும் காடன்!

O

காய்த்து உணவிற்கு நின்றன தோட்டச் செடிகள்
கமழ்ந்து காற்றைத் தூய்மை செய்தன கொடிகள்.
ஏய்த்து மக்கட்கு இரண்டகம் செயும்
இனப்பகைவர்கள் அரசியல்முட்டுச்செடிகள்
வாய்ப்பந்தலிட்டு உட்பூசலால்
வளர்ந்து மண்டிய வெற்றுக்கட்சிக் கொடிகள்!

O

குள்ளமனம், கூறுகெட்ட கரியன்
குருட்டறிவுத் திறமையிலே பெரியன்!
எள்ளும் வண்ணம் உவமைகூறித்
தனக்கு நிகர் தானே என்றான் விரியன்.
கொள்ளைப் பொய்யன் குப்பைத்தொட்டிக்
குவமை இல்லை என்றான் மகன் அரியன்!

நல்லவரைக் காணவில்லை நாட்டில்
'நரிகள் பன்றிகள்' என்றெழுதினேன் ஏட்டில்;
வல்ல தோழன் வாய் திறந்தான்
'வாழ்ந்தவர்கள் பலரும் சுடு காட்டில்'
சொல் முடியுமுன் யாமிருவர்
துறத்தப்பட்டோம் நல்லார் சிறைக் கூட்டில்!
O
நல்லிசைப்பண் பாடல்தந்தான் பொன்னி
நாடவில்லை வந்தவர்கள் எண்ணி;
புல்லிசைப்பண் பாடலுற்றாள்
புடவை நெகிழ ஆடலுற்றாள் கன்னி;
வல்லிசையின் பல்லியங்கள்
வாய் பிளந்து காணலுற்றார் உன்னி!
O
வீரவழி பாட்டினுக்கோர் ஆளை
வேண்டி உலாப் போந்து வந்தார் கோளை;
ஆர அமர எண்ணிடாமல்
அடுத்துவரும் தேர்தலுக்காம் நாளைக்
கூறப்பலர் கொண்டு வந்தார்
குற்றத்திலே தோய்ந்த ஒரு தோளை!
O
நாட்டுடைகள் அணிந்திருந்த போது
நல்லபடிதான் இருந்தாள்அம் மாது
வீட்டிலிருந்து திரையரங்கம்
மேவி இரு படங்கண்டபின் தீது
காட்டும் இழி நாகரிகக்
காட்சிப்பொருள் ஆனால் இப்போது!

எங்கள் நல்ல கல்வி திட்ட தேர்வு!
எண்ணிப்பார்த்தால் அத்தனையும் சோர்வு!
தங்களுடைய விழிப்பிலாத
தரம் இலாத விளைஅனைத்தும் சார்வு,
இங்கெழுதும் நுண்மதிஞர்
இருளில்ஒளி ஆகும்அதே தீர்வு!

O

பேராசையால் மக்கள் தலைவன் ஆனான்
பெருவிழாக்கள், புகழ்மாலைக்குள்ளானான்;
ஓராண்டின்பின் தேர்தல்வர
ஓங்கியகல் லடிகளினால் போனான்;
ஊராள வருபவர்கள்
ஒழுக்கமற்றால் ஒழிபடச் சான்றானான்!

O

''வாழ்விலக்கியம் வாழ்தல்'' என்றார் ஒருவர்
''வாழ்வை எழுதல் அது'' என்றார்மற் றொருவர்;
''வாழ்வின் குறிக் கோளனைத்தும்
வருவாய்'' என்றார் பேராசிரியர் அறுவர்.
''வாழ்வாவது மண்ணாவது
வரைந்துதள்ளவே எழுத்து-' என்றார் பன்னிருவர்!

O

மதுவிலக்குத் துறையமைச்சர் மனைவி
மதுவிலக்கா அமைச்சர்க்கேற்ற துணைவி!
எதுவிலக்க வேண்டும் என்றே
எடுத்த ஏலக் காரர்களை வினவி,
அதுவிலக்கி ஐந்துகோடி
அள்ளிக்கொண்டாள் கற்புக்கரசி முனகி!

போர் காதல் இரண்டினையும் வைத்துப்
பொய்புரட்டுக் கற்பனைகள்பு தைத்து;
ஆர்க்கும் வர லாற்றுக்கதை
ஆக்குவதில் வீண்பெருமைஉ ரைத்து
ளார் தட்டினான். வரலாற்றறிஞர்
வரக்கண்டோடினான் முகம்பு தைத்து!

O

இளவேனிற் காலம் எழிற் கன்னி;
கோடைக்காலம் இந்நாடாளும் மன்னி.
தளிர் உவக்க இலையுதிரும்
வறளைக் காலம் தவிக்கும் விதவைக் கன்னி
அளிக்கும் மழைக்காலம் இனிய
அன்பருமை காட்டுகிற அண்ணி!

O

நிகழ்காலம் இழந்திடும் ஓர் தடியன்
இறந்தகாலத் தேங்குகின்ற மடியன்;
உகந்த எதிர் காலத்திலே
உலகை ஆட்டிப் படைப்பனோ இப் பொடியன்?
தகவற்றுப் போய்விடுவான்
தனையறியாது அழிந்துபடும் குடியன்!

O

உழைப்பெதற்கோ என்று கேட்டான் மேலான்
உழைத்திடாமல் ஊர் உறிஞ்சும் நூலான்;
பிழைப்பை மதக் கடவுள் பேரால்
பேணும் அறியாமைக்குதவும் காலன்.
முழை உறங்கும் அரிமாவினும்
முப்போதலையும் நரிமா அட மேலாம்!

மலட்டுப் பசுவைச் சந்தையிலே கொண்டு
மடிநிறையும் பணத்திற்கு ஈந்தான் குண்டு:
கலப்பரசின் சட்டமன்றார்
கரும்பணத்தை வெள்ளையாக்கிக் கொண்டு
மலட்டுப் பசுவை அரசு பண்ணையில்
மடக்கிவிட்டார் மாதம் ஆயிரம் உண்டு!

O

செறியா உணவு கீழிறக்கும் சரக்காய்
திரைப்படங்கள் வாரம் வரும் முறுக்காய்,
அறியாமைகள் அத்தனையும்
அடகுவைத்து வெளிக்கொணர்ந்த பெருக்காய்,
புரியாமைகள் போக்கிலிகள்
புதந்ததினால் படம் கழன்றது சுருக்காய்!

O

பாட்டரங்கம் சுவைக்கச்சென்றார் மக்கள்
பாடல் எல்லாம் மொழிதெரியாச் சொற்கள்.
நாட்டமைச்சர் புகழலுற்றார்
நற்றமிழில் இல்லை அந்தத் திக்கல்;
வீற்றிருந்தார் விட்டெறிந்தார்
வெளியில் இல்லை, கிடந்த சரளைக் கற்கள்!

O

மக்கள் எதற்குத் தேர்ந்தெடுத்தார் என்று
மதிமிகுந்தார் நன்குணர்ந்தார் இன்று.
சிக்கல் தீர்த்துச் செழிப்புண்டாக்கும்
செம்மனத்தார் சேரும் சட்ட மன்று
குக்கல் நாணும் வகையில் அடியில்...
கொள்கையில்லார் நடவடிக்கை நன்று!

மாதவிடாய் போல பல கதைநூல்
மழைக்காலப் புற்றீசலாய்ச் சதைநூல்
ஓதரிய நூல்கள் என்றே
பொருள்சுரண்டும் ஒட்டுணிகள் புதைநூல்;
மாதம் மாதம் வெளியிடுவார்
மலடிபெற்ற காயடித்த விதைநூல்!

O

கொட்டாவி விட்டுக்கொண்டே காலைக்
குறட்டில்வைத்து நெய்துவிட்டான் சேலை;
பட்டாங்கில்லை என்பதினால்
பறிபோயிற்று நெய்துவந்த வேலை.
கெட்டான் கண் மூடி ஓடிக்
கிணற்றில் விழுந்து இறந்துவிட்டான் மாலை!

O

பொதுமைஇலா நாட்டுடைமை வங்கி
புகுந்திடுவார் உண்டிடுவார் பொங்கி;
எது எமக்கு நலன் செய்கவே
எனக்கேட்குமுன் ஆளவந்தார் தங்கிப்
பதுக்கிடுவார் கட்சிக்காகப்
பத்தாயிரம்பேர் வாழ்வைக்காட்டி முங்கி!

O

அலிக்கெதற்கு வைப்பாட்டியின் பற்று?
அறிவிலார்க்கேன் அரசியலில் சுற்று?
செவியிலார்க்கேன் புல்லாங்குழல்
தேனிசையாழ்ப் பண்ணொலியின் நெற்று?
விழியிலார்க்கேன் ஒளிக்கண்ணாடி.
வெறுந்தலைக்கேன் சீப்பினால் சுழற்று?

அறிஞன் ஒரு குவளை மதுக் குடித்தான்
அறிவிலி ஒரு குவளை மதுக் குடித்தான்;
அறிஞன் அமைதி யாய்இருந்தான்
அறி விலியோ அட்டகாசம் பிடித்தான்;
வெறிபிடித்த நாய்குலைக்க
வெட்கமற்றுக் குலைத்து அவனும் துடித்தான்!

O

திட்டத்தின்மேல் திட்டமிட்டான் நினைத்துத்
தேசநலன் தன்நலம் என்று இணைத்து
முட்டாள்களும் மூதறிஞர்
மூளையுள்ளோர் என்றமைச்சில் பிணைத்து,
உட்கார்ந்ததும் ஊழல்வென்றது;
ஓகோ என்றது கழுதையெலாம் கனைத்து!

O

தனக்கதிகம் தெரியும் என்று நின்றான்.
பொருள்கொடுத்துத் தலைவனாக வென்றான்;
தனக்கெதிராய் வாக்குறுதிகள்
தவறிடவே புரட்சிமக்களைக் கொன்றான்!
தனக்கெதிராய் மக்கள்திரளத்
தாங்கொணாமல் தற்கொலைக்கே சென்றான்!

O

"கண்டவரோடு சுற்றுவதை விடுவாய்
கண்டால் இனிக் கொலைசெய்யப் படுவாய்"
பெண் உரைத்தாள்: நாளுக்கொரு
கட்சியிலே பின்தொடர்ந்து கெடுவாய்,
கண்ணினைப்போல் கணவன் மனை
காட்சியிலே மாறிடுமோ படுவாய்?

தமிழ்த்தெய்வம் என்றுசிலை எடுத்தார்
தமிழாலயம் தலைநகரில் முடித்தார்,
தமிழியக்கம் கற்றறியான்
தலைவன் எனத் தமிழறியார் கொடுத்தார்!
தமிழால் வாழும் பெருச்சாளிகள்
தமிழ்ப்பயிரின் விளைவையுண்டு கொழுத்தார்!

O

"அன்பே சிவம்" முதலாளி சொன்னான்.
ஆலையிலே வேலைநிறுத்தம் பண்ணாள்;
கொன்றுகுவிக்கக் காவல்வேண்டி
ஆளவந்தார் கூட்டுடனே நின்றான்.
வன்பே சிவம் ஆயிற்றங்கே
அன்பேசிவம் ஆயிரம்பேரைக் கொன்றான்!

O

எங்கள் ஊரின் அரசுத்துறை இயக்கி
எவரையுமே, புகழுரையால் மயக்கி,
இங்கிருந்து, மேலைநாட்டில்
'இங்கிலீசில்' தமிழ்ப்பண்பாட்டை முழக்கிப்
பொங்குபுகழ் கொணர்வேன் என்றான்;
புண்கொணர்ந்தான் பொய்மகளிர் முயக்கில்!

O

கடவுள் எப்போ வருவார் என்றாள் கிள்ளை
காணுதேடி விட்டார் என்றாள் செள்ளை.
இடக்குமடக்கு இசைமுழக்கம்,
எரிச்சலூட்டும் 'சமற்கிருத'த் தொல்லை
அடங்கிடுமேல், அன்பின்உண்மை
அரும்பிடுமேல் இறைவன் நமது பிள்ளை!

உழைப்பினாலே விளையும் பயிர் நாற்று
உலகுயிர்கள் அனைத்தினுக்கும் ஊற்று.
நுழைக்கும் விதி, சோம்பலூட்டும்
நோய்க்கடவுள் நம்பிக்கையை மாற்று.
உழைக்கும் மக்கள் அன்பில் உறவில்
உண்மையுண்டு மானுடத்தைப் போற்று!

○

கணவன்ஒரு பரத்தையின்பால் சென்றான்
மனைவி ஒரு பரத்தனிடம் சென்றாள்
கணவிருட்டில் திசைமாறினர்...
காதலர்என்று இருவரும் இதழ் தின்றார்,
புணர்கையிலே கணவன் மனைவி
புரிந்ததும் ஒன்றும் நடவாததுபோல் சென்றார்!

○

வெஞ்சினத்துக் குமுறலையும் புரட்சிக்
கனலையும் தாம் வெளியிடலாய் வறட்சி
விஞ்சிநிற்கும் சிற்றுணர்ச்சி
ஊதும் நுரைக்குமிழிகளின் திரட்சி;
மிஞ்சும்குட்டி பொருளாளிப
மிகுவியப்பு வான் கோழியின் அரட்சி!

○

விலைமகளின் உறவினனாய் ஒருவன்
வீற்றிருந்தால், வந்திடுவான் மருகன்.
திலையனவே ஆளரசில்
திமிர்ந்திடுவோர் மக்கள் பக்கம் ஒருகண்
விலைகுறித்தால் துறந்திடுவார்
விலக்கிடுவார் அழித்திடுவார் மறுகண்!

ஆயிரம் கட்சி ஆயிரம் தலைவர் நாட்டில்
அனைவருழைப்பும் மக்கட்கென்றார் ஏட்டில்;
ஆயிரம் திட்டம் ஆயிரம் கொள்கை
ஆயிரம் போக்கு கொண்டோர் ஒருமைப் பாட்டில்
தோயணும் என்று விழாவெடுத்தார்
ஆயிரம் தலைவர் ஒன்றுவது என்றோ கோட்டில்!

O

சூதாட்டத் தூண்டிலிலைப் போட்டுச்
சுரண்டுகிற முதலாளிய வேட்டு
ஆதாயத்தை அரசியலின
அரவணைப்பில் கொள்ளையிட்டுக், காட்டு
ஓநாயாகச் சாகடிப்பார்
மக்களுயிர் உறிஞ்சுவதில் கூட்டு!

O

பொதுவுடைமை பொலிந்திடா இந் நாடு
புற்றரவின் நச்சுமலைக் காடு
எதிலும் எங்கும் தன்னலத்தின்
இரைபிடிக்கும் சிலந்திவலைக் கூடு.
எதுவரைக்கும் இதுநிலைக்கும்
எரிமலையாம் புரட்சிமக்கள் பாடு!

O

அன்பின்விழிகள் சாவிருளின் ஊடும்
அகன்வானின் விண்மீன்களாய்ப் பாடும்.
அன்பின்பாதம் காலணிகள்
எவையும் இன்றிக் கல்லில் முள்ளில் ஓடும்!
அன்பே என்றும் இறப்பைவென்று
அனைத்துலகை அரவணைத்துக் கூடும்!

★

வளர்மதியின்
தரமான நூல்கள்

★ அழகின் பரதம் -த. பீ. செல்லம் 10.00

★ ஒரு வசந்தத்துக்காக
உதிர்ந்த மலர்கள் -நா. காமராசன் 7.00

★ நாங்களும் வாழ்கிறோம்
-ஜோதிர்லதாகிரிஜா 25.00

★ ஒரு கிராமத்தின் கதை
-செங்கை ஆழியான் 9.00

★ மொழி பெயர்ப்பு-பண்பும் பயனும் 9.00
[எப்.எக்.சி. நடராசா, ம.இலெ. தங்கப்பா, த.கோவேந்தன், இறையரசன் ஆகியோரின் ஆய்வுரைத் தொகை நூல்]

★ அறிமுகம் -இரா.ஆனந்தி 7.00

★ நெருப்பு வெளிச்சம்
-அன்னலட்சுமி ராஜதுரை 11.00

★ MEADOW FLOWERS
—M. L. THANGAPPA 4.00

★ புறநானூறு -த. கோவேந்தன் அச்சில்

o o o